உம்ரா



செய்வது எப்படி?

மௌலவீ முஹம்மது தமீம்
புஹாரி எம். இப்றாஹீம்



காஜியார் புத்தக சாலை

உம்ரா செய்வது எப்படி?

★

★ மௌலவி தமீம் (ஷிர்க்கீ, பாக்கவி)
காத்தநகர் புஹாரி எம். இப்ராஹீம்
M.B.B.S. (M.H.)

★

வெளியீடு :

முஸ்லிம் தெரு, M. சாவடி, தஞ்சாவூர்—613 001
போன் : 21529 ★ த. பெ. எண் : 29

முதற் பதிப்பு : ஜனவரி—1995

Name of the Book	—	UMRA SYVATHU EPPATI?
Subject	—	Literary
Author's Name's	—	Moulavi Mohamed Thameem & Kathanagar Buhari M. Ibrahim M.B.B.S. (M.H.)
Copyright	—	QAZIAR BOOK DEPOT (Publisher)
Edition	—	First
Month & Year of Publication	—	January—1995
Price	—	Rs. 7/—

விலை : ரூ. 7-00

அச்சிட்டோர் :

பிறை பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்

151, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.

தொலைபேசி எண்: 510152

தொகுப்பாளர் உரை

அல்ஹம்துலில்லாஹ்!
அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

"உம்ரா செய்வது எப்படி?" எனும் இந்த நூலை நான் எழுதியிருக்கிறேன். காரணம் இன்று பல நூல்கள் வெளி வந்திருந்தாலும் உம்ரா செய்யும் விபரங்களை ஒரே பார் வையில் தெரிந்து கொள்ள முடியாமல் உம்ரா செய்யும் முஸ்லிம்கள் பல பிரச்சினைகளில் அல்லல்படுவதை நான் அறிவேன். இந்த சிந்தனையை நான் கொண்டிருந்த போதுதான் சகோதரர் புஹாரி எம். இப்ருஹீம் அவர் கள் என்னிடம் வந்து இப்படி ஒரு நூலை எழுதினால் என்ன என்ற கேள்வியை எழுப்பி என்னை இதைப் பற்றிய எழுத் தில் ஆர்வத்தைத் தூண்டி விட்டார்கள். இந்தத் தூண்டு தலின் பேரில் "உம்ரா செய்வது எப்படி?" என்ற இந்த நூல் உருவாயிற்று.

இதில் பல விஷயங்களைப் பல நூல்களிலிருந்து ஒன்று சேரத் திரட்டியுள்ளேன். நிச்சயம் இந்நூல் பலருக்கும் ஒரு வழிகாட்டியாகச் செயல்படும் என்பதை நான் அறி கிறேன். முதன் முதலாக இந்நூல் வெளிவருவதால் பல விஷயங்களைச் சேர்க்க முடியவில்லை. இதில் பல விஷயங் களை இலகுவாகவே உம்ராச் செய்பவர்கள் தெரிந்து கொள்ளலாம். மேலும் இன்று ஸவூதி அரேபியாவிற்கு உம்ரா செய்யச் செல்பவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ அல்லாஹ் கபூல் செய்வானாக. ஆமீன்!

இந்நூலுக்கு சகோதரர் புஹாரி எம். இப்ருஹீம் அவர்கள் எனக்குப் பல வழிகளிலும் உதவிகளும், ஒத்

தாஸைகளும் செய்துள்ளார்கள். அவர்களுக்கு என்னு டைய ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். படிக்கும் வாசகர்கள் அச்சுப் பிழைகள் இருந்தால் வெளி யீட்டாளர்களுக்கு எழுதுங்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ள வசதியாகயிருக்கும்.

வஸ்ஸலாம்.

நிந்தவூர்-1, அன்புடன்

சிறீலங்கா. மௌலவி முஹம்மது தமீம் (பாக்கவி)

*

சமர்ப்பணம்

இந்நூல்
ஏகத்துவவாதிகளுக்குச்
சமர்ப்பணம்.

அல்ஹம்துலில்லாஹ்!

உதவி ஆசிரியர் உரை

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

மக்கா சென்று உம்ரா செய்பவர்களின் நலன் கருதியும், அங்கு தொழில் புரியும் ஊழியர்களின் நலன் கருதியும் ''உம்ரா செய்வது எப்படி?'' என்ற நூலை அல்லாஹ்வின் அருளால் வெளிக் கொணர்ந்துள்ளோம். இந் நூல் உம்ராச் செய்யும் முஸ்லிம்களுக்கு ஒரு வழிகாட்டியாகச் செயல்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

இந்நூலை சுவைக்கும் வாசகர்கள் பிழைகள் ஏதும் இருந்தால் எங்களுக்கு எழுதினால் அடுத்த பதிப்பில் இன்ஷா அல்லாஹ் நாங்கள் திருத்திக் கொள்வோம் என அன்புடன் தெரியத் தருகின்றோம்.

வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்
காத்தநகர்
புஹாரி எம் இப்ராஹீம்
M.B.B.S. (M.H.)

ஹில்ஸ்பெரி,
ஹிலுறியா லேன்,
காத்தான்குடி-2,
சிறீலங்கா.

எல்லா விஷயங்களும்
அரபு தெரியாதவர்களுக்காகத்
தமிழ் மொழியில் தரப்பட்டுள்ளது.

பதிப்புரை

நஹ்மதுஹூ வ நுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்.

அளவிலா அருளும், நிகரிலா அன்பும் இலங்கும் ஓரிறையின் இனிய பேர் போற்றி!

சாந்தியும் சமாதானமும் அகிலங்களுக்கோர் அருட் கொடையாக வந்துதித்த நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் உறவினர்கள், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

நீண்ட நெடு நாட்களாக அகீதாவுக்கு மிக உன்னத மான இடத்தை அளித்து வந்த முஸ்லிம்கள் காலம் செல்லச் செல்ல அகீதாவை புறக்கணித்து மற்ற துறைகளுக்கு முக் கியத்துவம் அளிக்கத் தொடங்கி விட்டனர். அகீதா முஸ் லிம்களின் வாழ்விலிருந்து விலகத் தொடங்கியதால் மாற்று மதத்தவர்களின் சமயக் கோட்பாடுகள் முஸ்லிம்கள் மத்தி யில் ஊடுருவி விட்டன; ஊடுருவியும் வருகின்றன.

இந்த அபாயத்திலிருந்து ஈடேற்றம் பெற, அல்லாஹ் வின் மார்க்கத்தின் பால் மக்களை அழைக்க தெளிவான ஆதாரங்களைக் கொண்டும், தர்க்கரீதியான விளக்கங்களை கொண்டும்தான் முடியும்.

இதற்கு மார்க்க நூல்களின் பங்கு அளப்பரியது. உர்தூ மொழியில் பல இஸ்லாமிய நூல்கள் எண்ணிறந்து வெளி வந்துள்ளன. ஆனால் தமிழிலோ...?

இந்த எண்ணத்தின் தாக்கத்தால் பல மார்க்க அறிவு நூற்களை முழு மூச்சுடன் வெளியிடத் தொடங்கினோம். மேலும் தொடர்ந்து வெளியிட்டும் கொண்டிருக்கிறோம். பலரும் எங்களின் பணியைப் பாராட்டும்பொழுது எங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றதாகவே எண்ணுகிறோம்.

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் மாபெரும் கிருபைதான் எங்கள் முயற்சிகள் அனைத்திற்கும் உறுதுணை. எங்கள் பதிப்பகத்தின் மற்றுமொரு வெளியீடுதான் தங்கள் கரங்களில் தவழும் ''உம்ராச் செய்வது எப்படி?'' என்னும் இந்நூல்.

இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து எங்கள் பதிப்பகத்தின் மூலம் பல இஸ்லாமிய ஆத்மீக நூற்களை வெளிக் கொணர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். தாங்கள் அனைவரும் துஆச் செய்ய வேண்டுகிறோம்.

வஸ்ஸலாம்.

—காஜியார் புக் டிப்போ
தஞ்சாவூர்



بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

உம்ரா பற்றிய சில பொது விளக்கங்கள்

★ நபிமார்கள் ஹஜ் காலத்தை விட ஏனைய காலங்களில் புனித மக்கமா நகர் சென்று உம்ரா செய்துள்ளார்கள். எனவே புனித நபிமார்களைப் பின்பற்றியவர்களாக நாமும் உம்ரா செய்வது வாஜிபாகும்.

★ மானிட வாழ்வில் ஒரு தடவையேனும் உம்ரா செய்வது நம் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.

★ ஹஜ்ஜு யார் யார் மீது விதியாக்கப்பட்டுள்ளதோ-அவர்கள் அனைவர் மீதும் 'உம்ரா' விதியாக்கப்பட்டுள்ளது.

★ ஹஜ் காலம் தவிர ஏனைய எல்லாக் காலங்களிலும் உம்ரா செய்யலாம் - ஹஜ்ஜையும் உம்ராவையும் இணைத்தும் செய்யலாம். ஆனால் ஹஜ் - குறிப்பிட்ட துல்ஹஜ் மாதத்தில் மட்டுமே செய்யப்படல் வேண்டும்.

★ ஒருவர் செய்த முதலாம் உம்ராவுக்கும்-பின்னர் செய்யும் இரண்டாம் உம்ராவுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவரின் பெரும் பாவம் தவிர ஏனைய பாவங்கள் யாவும் இறைவனால் மன்னிக்கப்படுகின்றன.

★ ஹஜ் செய்வோர் அரபாவில் தரிப்பது வாஜிபாகும். ஆனால் உம்ரா செய்வோர் அரபாவில் தரிக்க வேண்டிய அவசியமில்லை.

கவனிப்பு

உம்ராவை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ்வின் வீட்டைத் தரிசிக்கின்ற பேற்றினை உங்களுக்கு அவன் அருளியமைக்காக அவனைப் புகழுகின்றோம்.

நம் எல்லோருடைய நல்லமல்களையும் அவன் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுமாறும், அதற்குப் பன்மடங்கு பிரதிபலனை நல்குமாறும் அவனை வேண்டுகிறோம்.

ஞாபகத்தில் இருக்க வேண்டியவை:

(1) புனிதமான ஒரு யாத்திரையை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

'தௌஹீத்' என்னும் ஏக தெய்வக் கொள்கையை கடைபிடிப்பவர்கள் என்பதை நிலைநாட்டி வருபவர்கள் அல்லாஹ்வை மட்டும் தூய்மையாக வணங்குதல், எல்லா நிலையிலும் அவனிடமே கேட்டல், அவனுக்கே முற்றிலும் சிரம் சாய்த்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அல்லாஹ்வின் பாதையில் செய்யும் ஹிஜ்ராவை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்கள்.

அல்லாஹ்விடத்தில் பிரதிபலன் அதிகமாகக் கிடைக்கும் நல்ல அமல் இதை விட எதுவும் இல்லை.

அல்லாஹ்விடத்தில் நல்ல அமல்களுக்குரிய பலன் என்ன தெரியுமா?

அது சுவர்க்கமாகும் என்பதையும் நீங்கள் நினைவில் கொள்வது அவசியமாகும்.

(2) ஷைத்தான் உங்களை வழி தவறச் செய்வதை விட்டும் அஞ்சிக் கொள்ளுங்கள்.

ஏனெனில் அவன் திட்டம் போட்டு எதிர்பார்த்திருக்கும் விரோதியாக இருக்கிறான்.

எனவே நீங்கள் அல்லாஹ்வின் உதவியால் ஒரு வருக்கொருவர் நேசமுடையவர்களாக இருந்து வீண் த க்கங்களையும், பாவச் செயல்களையும் விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

ரஸூல் (ஸல்) அவர்கள், ''ஒரு நல்ல காரியத்தை தமக்கென விரும்பும்போது அது தம்முடைய இஸ்லாமிய சகோதரருக்கும் கிடைக்க வேண்டும் என விரும்பாதவரை ஒருபோதும் ஒருவர் உண்மை மூமினாக ஆக முடியாது'' எனச் சொல்லியுள்ளார்கள் என்றால் இதன் உண்மை என்ன?

'என் ஆசைதான் மற்ற முஸ்லிம்களுடைய ஆசையாக இருக்க வேண்டும்'' என்பதை நல்ல விஷயங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

(3) உங்களுக்கு சந்தேகமான தெரியாத மார்க்க விஷயங்களையும், ஹஜ்ஜு, உம்ராவுடைய காரியங்களையும் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் செய்யும் அமல்களை சரியாகவும் விழிப்புணர்ச்சியோடும் செய்ய முடியும்.

''நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.''
—அல்குர்ஆன் : 16:43

ரஸூல் (ஸல்) அவர்கள், ''அல்லாஹ் யாராகிலும் ஒருவனுக்கு நன்மையை நாடும்போது அவனை மார்க்க அறிவுடையவனாக ஆக்கி விடுகின்றான்'' எனச் சொல்கிறார்கள்.

(4) அல்லாஹ் நம் மீது பர்ளான (கடமையான) காரியங்களை விதித்துள்ளான்.

எவன் பர்ளான காரியங்களைப் பாழாக்கி விட்டானோ அவனுடைய சுன்னத்தான காரியங்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

ஏனெனில் சில ஹாஜிகள் இந்த பெரும் உண்மையினை உணரத் தவறி விடுகின்றனர். இதனால் முமினான ஆண்கள் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கின்றனர்.

உதாரணமாக!

ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது, தவாப் செய்யும்போது சிறிது தம்மை குலுக்கி ஓடுவது, ''மகாமே இப்ராஹீம்'' என்ற இடத்தின் பின்னால் தொழுவது, ஜம்ஜம் தண்ணீர் குடிப்பது இவை சுன்னத்தான செய்கைகள் ஆகும்.

ஆனால் முஸ்லிம்களுக்கு கஷ்டம் கொடுப்பது 'ஹராம் —விலக்கப்பட்ட'தாகும்.

ஒரு சுன்னத்தைச் செய்வதற்காக ஹராமான காரியத்தை எப்படி நாம் செய்ய முடியும்.

உங்களில் சிலர் சிலருக்கு தொல்லைகள், கஷ்டங்கள் கொடுப்பதை விட்டு விடுங்கள். அல்லாஹ் அதற்கான நற்கூலியை உங்களுக்குக் கொடுத்தருள்வான்.

விஷயங்களைத் தெரிந்து கொள்வதால்...!

(1) மக்காவில் உள்ள பள்ளிவாசல்களானாலும் சரி, வேறு எந்த பள்ளிவாசல்களானாலும் சரி, தம்மாலும் சில தவறுகளை தவிர்ந்து கொள்ள முடியும் என்றிருந்தால் எந்தக் காரணத்திற்காகவும் ஒரு முஸ்லிம் ஆண், பெண் ணின் அருகிலோ, அவள் பின்னாலோ தொழுவது கூடாது. பெண்கள் ஆண்களின் பின்பக்கம் நின்றே தொழ வேண்டும்.

(2) மக்கா பள்ளியின் (ஹரமின்) வாசல்களும் அதன் இதர வாசல்களும் நுழைவாசல்களாகும்.

எனவே அதன் நுழைவாசல்களில் தொழுவதும் அல் லது ஜமாஅத்துடன் சேர்ந்து தொழ வேண்டும் என்பதற் காக அந்த நுழைவாசல்களை ஸப்புகளால் அடைப்பதும் கூடாது.

(3) தவாப் செய்யக் கூடியவர்களுக்கு இடையூறாக கஃபாவின் அருகில் இருப்பதும், கஃபாவின் அருகில் தொழுவதும், 'ஹிஜ்ர் இஸ்மாயில்' என்னும் வளைவின் பக்கம் நிற்பதும், 'மகாமே இப்ராஹீம்' என்ற இடத் தில் நின்று கொண்டிருப்பதும் கூடாது.

குறிப்பாக நெருக்கடி நேரங்களில் அறவே கூடாது. ஏனெனில் இதனால் பிற ஹாஜிகளுக்குத் தொல்லைகளும், கஷ்டங்களும் ஏற்படுகிறது.

(4) 'ஹஜருல் அஸ்வத்' என்னும் கல்லை முத்தமிடுவது ஒரு சுன்னத்தான செயலாகும்.

அதே நேரம் ஒரு முஸ்லிம் சகோதரனுடைய கண்ணியத்தைப் பாதுகாப்பதோ (பர்ள்) கட்டாயக் கடமையாகும்.

ஒரு சுன்னத்தைச் செய்வதற்காக ஒரு (பர்ள்) கடமையை பாழ்படுத்துவது கூடாது.

மிகவும் நெருக்கடி மிகுந்த நேரங்களில் அக்கல்லின் பக்கம் கையால் சுட்டிக் காட்டி 'பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்' என்று கூறி தவாப் செய்பவர்களோடு நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

தவாப் செய்பவர்களை நெருக்கித் தள்ளி வெளியே செல்வதும் கூடாது. மெதுவாக தவாப் செய்யும் இடத்தை விட்டு வெளியில் செல்ல வேண்டும்.

(5) ''ருக்னுல் யமானியை'' முத்தமிடுவது சுன்னத் அல்ல.

நெருக்கம் இல்லாமல் இருக்கும்போது வலது கையால் தொட்டால் போதுமானது. அவ்வாறு தொடும்போது ''பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்'' என்று கூற வேண்டும்.

குர்ஆனையும், ஹதீதையும் பின்பற்றியொழுகுமாறு இறுதியாக எல்லோருக்கும் உபதேசிக்கின்றோம்.

வல்ல அல்லாஹ்வும் தன்னுடைய அருள்மறையான திருமறையில், ''நீங்கள் அருள் செய்யப்படுவதற்காக அல்லாஹ்வையும் அவன் தூதரையும் வழிப்படுங்கள்'' (அல்குர்ஆன்-5:95) என்று கூறுகிறான்.

உம்ரா செய்யும் முறை

(1) எல்லையை வந்தடைந்ததும் முடியுமானால் குளித்து மணம் பூசிக் கொள்ள வேண்டும்.

பின்பு இஹ்ராமுடைய ஆடையான ஒரு வேட்டியும், மேலே போர்த்திக் கொள்ளும் ஒரு துணியும் அணிய வேண்டும்.

இத்துணிகள் வெண்மை நிறமுடையதாக இருத்தல் சிறந்ததாகும்.

பெண்கள் தங்கள் அழகை வெளிப்படுத்தாத எந்தத் துணியிலும் இஹ்ராம் அணிந்து கொள்ளலாம்.

இஹ்ராம் உடை அணிந்த பின்பு ''லப்பைக்க உம்ரதன்'' என்று கூறிய பின்,

''அல்லாஹும்ம இன்னீ உரீதுல் உம்ரத பயஸ்ஸிர்ஹாலீ வதகப்பல்ஹா மின்னீ, நவய்துல் உம்ரத வ அஹ்ரம்து பிஹாவில்லாஹி தஆல அஸ்ஸ வஜல்ல'' என்று இந்த உம்ராவின் நிய்யத்தைச் செய்து கொள்ள வேண்டும்.

நிய்யத்துச் செய்ததன் பின்பு ''லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்க, லப்பைக்க லாஷரீகலக லப்பைக்க, இன்னல் ஹம்த வ நிஃமத லக வல்முல்க லாஷரீகலக'' என்ற தல்பியாவை ஆண்கள் சப்தமிட்டும், பெண்கள் சப்தமின்றியும் சொல்லிக் கொள்ள வேண்டும்.

நிய்யத் வைத்த பின்னர் ஹஜ், உம்ரா ஆகிய வணக்கங்கள் முடியுமுன்னர் முஹர்ரமாத்களில் ஒன்றைச்

செய்தால் ஹஜ்ஜின் வாஜிபுகளில் ஒன்றை விட்டதற்காகக் கொடுப்பது போன்ற பித்யாவைக் கொடுக்க வேண்டும்.

ஆனால் மனைவியுடன் சேர்க்கையில் ஈடுபட்டு ஹஜ்ஜை அல்லது உம்ராவை முறித்துக் கொண்டால் ஓர் ஒட்டகம், ஒரு மாடு, எட்டு ஆடுகள் குர்பானி கொடுக்க வேண்டும்.

அந்த ஹஜ் அல்லது உம்ராவையும் இடையில் விடாது தொடர்ந்து செய்து விட்டுக் காலம் தாழ்த்தாது கூடிய சீக்கிரத்தில் அதனைக் களாச் செய்வதும் கடமையாகும்.

தல்பியாவின் பொருள்:

யா அல்லாஹ்! உன்னுடைய அழைப்பை ஏற்று வந்தேன். இணை துணையற்ற உன்னுடைய அழைப்பை ஏற்று வந்தேன். புகழனைத்தும் உனக்கே. அருட்கொடையும், அரசாட்சியும் உன்னுடையதே. உனக்கு யாதோர் இணையுமில்லை.

(2) மக்காவிற்கு வந்து சேர்ந்ததும் கஃபாவை ஏழு முறை தவாப் (வலம்) செய்ய வேண்டும்.

தவாபை 'ஹஜருல் அஸ்வத்' என்னும் கல்லிலிருந்து இருந்து தக்பீர் சொல்ல ஆரம்பித்து அக்கல்லின் முன்னால் வந்து முடிக்க வேண்டும்.

தவாப் செய்யும்போது தமக்கு விருப்பமான தெரிந்த துஆக்களை ஓதி அல்லாஹ்வை ஞாபகம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

தவாபை முடித்தபின் 'மகாமே இப்ராஹீம்' என்ற இடத்தின் பின்னால் தவாபுடைய இரு ரக்அத்துகளைத் தொழ வேண்டும்.

'மஹாமே இப்ராஹீமு'க்குப் பின்னால் எவ்வளவு தூரத்திலும் தொழலாம். அதன் பின்னால் தொழ முடியவில்லையானால் பள்ளியினுள் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தொழுது கொள்ளலாம்.

(3) தவாபுடைய தொழுகையை முடித்த பின் 'ஸபா' என்ற மலைக்குச் சென்று அதில் ஏறி கஃபாவைப் பார்த்தவாறு அல்லாஹ்வைப் புகழ்ந்து கையை உயர்த்தி மும்முறை தக்பீர் சொல்ல வேண்டும்.

தமக்குத் தேவையான துஆக்களை மும்முறை அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். இதுதான் சுன்னத்தான வழிமுறை. மேலும்,

''லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அந்ஜல வஃதஹு வநஸர அப்துஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு'' என்பதையும் மூன்று முறைகள் சொல்லிக் கொள்ள வேண்டும். இதை விடக் குறைவாகச் சொல்வதால் எவ்விதக் குற்றமும் இல்லை.

பின்னர் ஸபா மலையிலிருந்து இறங்கி மர்வாவுடைய ஏழு 'ஸயீ'யையும் செய்ய வேண்டும். (ஸபா மலையில் இருந்து மர்வா மலையைப் போய்ச் சேர்வது ஒரு 'ஸயீ' யாகும்.)

ஸபா, மர்வா இவ்விரு மலைகளுக்குமிடையில் பச்சை அடையாளமிட்டிருக்கும் எல்லைக்குள் வேகமாகச் செல்ல வேண்டும்.

மர்வா மலையை அடைந்ததும் அதில் ஏறி அல்லாஹ்வைப் புகழ்ந்து ஸபா மலையில் செய்தது போன்று செய்து

கொள்ள வேண்டும். முடியுமானால் அதிகமாக தக்பீர் சொல்ல வேண்டும்.

தவாப், ஸயீ இவ்விரண்டிற்கும் குறிப்பிட்ட எந்த துஆக்களுமில்லை. எனவே தமக்குத் தெரிந்த திக்ர் துஆக்களையும் அல்லது குர்ஆனையும் ஓதிக் கொள்ளலாம்.

(4) 'ஸயீ' செய்து முடிந்தபின் தலைமுடியை இறக்க அல்லது வெட்டிக் கொள்ள வேண்டும். இக்காரியங்களுடன் உம்ராவுடைய கடமைகள் எல்லாம் நிறைவு பெற்று விடுகின்றன.

இஹ்ராமின் காரணத்தால் விலக்கப்பட்டவை அனைத்தும் இப்போது ஆகுமானவை ஆகி விடுகின்றன.

எந்தெந்த இடத்தில் எந்தெந்த துஆக்கள் ஓத வேண்டும் என்ற விபரத்தினை வேருகத் தரப்பட்டுள்ளது. பார்த்துப் பயன் பெறுக.

இஹ்ராம் அணிந்தவர்கள் செய்ய வேண்டிய கடமைகள்

உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்தவர்கள் கீழ்க் காணும் காரியங்களைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்:

(1) அல்லாஹ் தம் மீது விதித்துள்ள எல்லாக் கடமைகளையும் தவருது செய்து வர வேண்டும். தொழுகைகளை இமாம் ஜமாஅத்துடன் அந்தந்த நேரத்தில் நிறைவேற்ற வேண்டும்.

(2) அல்லாஹ் விலக்கியுள்ள கெட்ட செயல்கள், தவறான காரியங்கள், வீண் தர்க்கங்கள், பாவச் செயல்கள் முதலியவற்றை விட்டும் ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

(3) முஸ்லிம்களுக்கு சொல், செயலால் எவ்விதக் கஷ்டமும் கொடுக்கக் கூடாது.

இஹ்ராம் அணிந்தவர்கள் செய்யக் கூடாத காரியங்கள்

(1) உடலில் உள்ள முடியையோ, நகங்களையோ வேண்டுமென்றே எடுக்கக் கூடாது.

இஹ்ராமுடைய நிலையில் தமக்குத் தெரியாமல் தானாகவே விழுமானால் எந்தக் குற்றமுமில்லை.

(2) உடல், ஆடைகள், உணவு, குடிபானம் முதலியவைகளில் மண வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது.

இஹ்ராம் கட்டுவதற்கு முன் பூசிக் கொண்ட மண வஸ்து ஆடையில் தங்கி இருப்பதால் தவறில்லை.

(3) பூமியில் உள்ள உயிர்ப் பிராணிகளை வேட்டையாடவோ, கொல்லவோ, விரட்டவோ கூடாது.

இஹ்ராமுடைய நிலையில் பிற வேட்டையாடுபவர்களுக்கு உதவியும் செய்யக் கூடாது.

(4) இஹ்ராம் கட்டிய நிலையிலும், இஹ்ராம் கட்டாத நிலையிலும் 'ஹரம் ஷரீ'பின் எல்லைக்குள் உள்ள

மரம், செடி, கொடிகளை வெட்டுவது, தவறி விடப்பட்ட பிறர் பொருட்களை எடுப்பது போன்ற செயல்கள் கூடாது. ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் இச்செயல்களைத் தடை செய்துள்ளார்கள்.

தவ்றி விடப்பட்ட பொருட்களை அதற்குரியவரிடம் ஒப்படைக்கும் எண்ணத்தில் அதை விளம்பரம் செய்வதற்காக எடுக்கலாம்.

(5) இஹ்ராமுடைய நிலையில் பெண் பேசல், திருமண ஒப்பந்தங்கள் நடத்தல், தமக்கானாலும் சரி, பிறருக்கானாலும் சரி கூடாது.

(6) இஹ்ராமுடைய நிலையில் மனைவியுடன் வீடு கூடுவதும், பெண்களுடன் காம உணர்வோடு கலந்துரையாடுவதும் விலக்கப்பட்டவைகளாகும்.

மேற்கூறப்பட்டவை ஆண், பெண் எல்லோர் மீதும் விலக்கப்பட்டவைகளாகும்.

இஹ்ராமுடைய ஆண்கள் மீது மட்டும் விலக்கப்பட்ட காரியங்கள்

(1) தலையை துணி போன்றவைகளால் மறைத்தல் கூடாது.

குடை, கார்களின் மேல்தட்டு இவை தலையில் நிழல் கொடுப்பதாலும், பொருட்களைத் தலையில் சுமப்பதாலும் எந்தக் குற்றமுமில்லை.

(2) தையல் போடப்பட்ட சட்டை அல்லது எந்த தைத்த உடைகளையோ உடம்பில் எந்த இடத்திலும் அணியக் கூடாது.

தொப்பி, தலைப்பாகை, சிர்வால், கால் உறை முதலிய வைகளை அணிதலும் கூடாது. வேட்டி கிடைக்காமலிருக்கு மானால் சிர்வால் அணியலாம்.

செருப்புக் கிடைக்காவிட்டால் கால் அங்கி அணிந்து கொள்ளலாம். இதனால் எந்தக் குற்றமுமில்லை. (கால் கரண்டையை மறைத்திருக்கும் செருப்பிற்கு கால் அங்கி என்று கூறப்படும்.)

இஹ்ராமுடைய நிலையில் பெண்கள் கையுறை அணி தல், முகத்தை புர்காவால் மூடுதல் விலக்கப்பட்டதாகும்.

ஆனால் அன்னிய ஆடவர்கள் முன் நிற்கும்போது இஹ்ராமல்லாத நேரத்தில் எவ்வாறு முகத்தை 'புர்கா' போன்றவைகளால் மறைத்துக் கொள்வது கடமையோ அவ்வாறு கண்டிப்பாக தம் முகத்தை 'புர்கா' போன்ற வைகளால் மறைக்க வேண்டும்.

இஹ்ராம் செய்திருப்பவர் மறந்தவராக அல்லது மார்க்கச் சட்டம் தெரியாமல் தையல் ஆடைகளை அணிந் தால் அல்லது தலையை மறைத்தால், தலை முடியையோ, நகத்தையோ வெட்டினால் அவர் மீது எந்தக் குற்றமும் இல்லை.

இதில் எதையேனும் மறதியாகச் செய்யும்போது, தாம் இஹ்ராமுடைய நிலையில் இருக்கிறோம் என்ற நினைவு வந்ததும் உடனே அதை விட்டு விட வேண்டும்.

செருப்பு, மோதிரம், கண்ணாடி, செவிக் கருவி, கை கடிகாரம், செருப்புப் பட்டி, பணப் பை முதலியவைகளை அணிந்து கொள்ளலாம்.

இஹ்ராமுடைய நிலையில் இஹ்ராம் துணியை மாற்றித் துவைத்துக் கொள்ளலாம்.

உடலையும் நீரால் கழுவலாம். இவ்வாறு நீரால் கழுவுவதால் தலைமுடி தானாகவே விழுமானால் அதனால் எந்தக் குற்றமுமில்லை.

உம்ரா செய்யும் ஹஜ்ஜாஜிகள் செய்யும் தவறுகள்

(1) வெளிநாடுகளிலிருந்து வரும் ஹாஜிகள் சரியான எல்லையில் வைத்து இஹ்ராம் கட்டாமல் எல்லையைக் கடந்து சென்று இஹ்ராம் கட்டுதல் கூடாது.

வெளியில் இருந்து வருபவர்கள் எந்த இடத்தில் இஹ்ராம் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திலும், உள்ளூர்வாசிகள் குறிக்கப்பட்ட இடங்களிலும் இஹ்ராம் கட்ட வேண்டும்.

''ஒவ்வொரு ஹாஜியும் தம் எல்லையில் இருந்தே இஹ்ராம் அணிந்து கொள்ள வேண்டும்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

(2) தம் எல்லையில் இருந்து இஹ்ராம் கட்டாமல் எல்லைக்குள் நுழைந்தவர் தமக்கு முடியுமானால் திரும்ப அந்த எல்லைக்குச் சென்று இஹ்ராம் கட்ட வேண்டும்.

அந்த எல்லைக்குச் செல்ல முடியாதவர் குற்றம் பரி காரமாக மக்காவில் ஓர் ஆடு அறுத்து அது முழுவதையும் ஏழைகளுக்குப் பங்கிட வேண்டும்.

தரை மார்க்கம், கடல் மார்க்கம், நடை மார்க்கம் எந்த மார்க்கமாக வந்தாலும் மேற்கூறப்பட்டதை கடை பிடித்தே ஆக வேண்டும்.

(3) இஹ்ராம் கட்டுவதற்காக குறிக்கப்பட்டுள்ள ஐந்து எல்லைகளில் எதிலும் செய்ய முடியாதவர் தாம் கடந்து செல்லும்போது முதல் முதலாகவுள்ள எல்லையின் நேராகவுள்ள இடத்திலிருந்து இஹ்ராம் அணிந்து கொள்ள வேண்டும்.

தவாப் செய்யும்போது நிகழும் தவறுகள்

(1) ஹஜருல் அஸ்வத் கல்லிருக்கும் இடத்திலிருந்து தான் 'தவாப்'பைத் துவங்க வேண்டும். அக்கல்லிருக்கும் இடத்திலல்லாமல் வேறு இடத்திலிருந்து துவங்கக் கூடாது.

(2) 'ஹிஜ்ர் இஸ்மாயீல்' என்ற வளைவிற்குள் தவாப் செய்வது கூடாது.

அவ்வாறு செய்யும்போது கஃபாவின் ஒரு பகுதியையே சுற்றியவராகக் கணிக்கப்படுவாரேயொழிய பூரணமாகக் கஃபாவை சுற்றியவராகக் கருதப்படமாட்டார். எனவே அவர் தவாப் வீணாகி விடுகிறது. ஏனெனில் ஹிஜ்ர் இஸ் மாயீல் கஃபாவின் ஒரு பகுதியே ஆகும்.

(3) மக்காவிற்கு வந்தவுடன் செய்ய வேண்டிய தவா பில் மட்டும் முதல் மூன்று சுற்றுக்களில் தோள் புஜத்தை சிறிது அசைத்துச் சற்று வேகமாகச் சுற்றுவது சுன்னத் தாகும்.

எல்லாச் சுற்றுக்களிலும் இவ்வாறு வேகமாகச் சுற்று வதும் கூடாது.

(4) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிடுவதற்காக மற்றவர்களை நெருக்கித் தள்ளிச் செல்வதும், அதற்காகச் சண்டை செய்வதும், தவருக ஏசுவதும் கூடாது. அவ் வாறு செய்வது முஸ்லிம்களுக்குக் கஷ்டம் கொடுப்ப தாகும்.

ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிம் சகோதரரை உரிமை யின்றி அடிப்பதும், ஏசுவதும் விலக்கப்பட்டதாகும்.

'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிடாமலிருப்பதால் தவாபிற்கு எந்தக் குறைவும் ஏற்பட்டு விடுவதில்லை. அதை முத்தமிடாதவரின் தவாப் சரியானதுதான்.

அக்கல்லை முத்தமிட வாய்ப்பில்லாதவர்கள் அக்கல் லின் நேரே வரும்போது தூரமாக இருந்தாலும் தம் கையை அக்கல்லின் பக்கம் காட்டி தக்பீர் சொல்லிக் கொண்டால் போதுமானது.

(5) 'ஹஜருல் அஸ்வத்' கல்லைத் தொட்டால் பரக் கத் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அதைத் தொடக் கூடாது.

இந்த எண்ணத்தில் செய்வது 'பித்அத்' ஆகும். இதற்கு ஷரீஅத்தில் எந்த ஆதாரமுமில்லை.

தம்மால் முடியும்போது அக்கல்லை முத்தமிடுவது சுன்னத்தாகும்.

(6) கஃபாவுடைய எல்லா மூலைகளையும் அதன் சுவர்களையும் தொட்டு முத்தமிடுவதும், கையால் தடவுவதும் கூடாது.

ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் 'ஹஜருல் அஸ்வத்', 'ருக்னுல் யமானி' இவ்விரண்டையும் தவிர வேறு எந்த இடத்தையும் தொட்டு முத்தமிடவில்லை.

(7) தவாபுடைய எல்லாச் சுற்றுக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட துஆவை ஓதுவதும் கூடாது. இவ்வாறு குறிப்பிட்டு துஆவை பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதியதாக ஆதாரமில்லை.

ஆனால் 'ஹஜருல் அஸ்வத்' கல்லின் பக்கம் வரும்போதெல்லாம் தக்பீர் சொன்னார்கள்.

ருக்னுல் யமானியிற்கும் ஹஜருல் அஸ்வத் கல்லுக்குமிடையில், ''ரப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரத்தி ஹஸனதன் வகினா அதாபன்னார்' என்ற துஆவை ஓதினார்கள்.

(8) தவாப் செய்பவர்களும், செய்ய வைப்பவர்களும் மற்றவர்களுக்குத் தொல்லை ஏற்படுமளவிற்குத் தங்களின் சப்தங்களை அளவுக்கதிகமாக உயர்த்துவது கூடாது.

(9) 'மகாமே இப்ராஹீம்' என்ற இடத்தில் தொழுவதற்காக மற்றவர்களை நெருக்கித் தள்ளுவதும் கூடாது.

ஸயீ செய்யும்போது நிகழும் தவறுகள்

(1) சில ஹாஜிகள் ஸபா, மர்வா ஏறி தக்பீர் சொல்லும்போது கிப்லாவை முன் நோக்கி நின்று தொழுகையில் கைகளை உயர்த்துவது போன்று இரு கைகளையும் உயர்த்தி கஃபாவின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறு சுட்டிக் காட்டுவது தவறாகும்.

ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள் துஆவிற்காக மட்டும்தான் தம்முடைய கரங்களை உயர்த்தினார்கள். கிப்லாவை நோக்கி அல்லாஹ்வைத் துதித்து தக்பீர் சொல்லித் தமக்கு வேண்டிய துஆக்களை அல்லாஹ்விடம் கேட்டார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதிய திக்ர், துஆக்களை ஸபா, மர்வா மலைகளில் ஏறி ஓதுவதே சிறந்தது.

(2) ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் பச்சை அடையாளமிட்டிருக்கும் எல்லைக்குள் மட்டும்தான் வேகமாகச் செல்ல வேண்டுமே தவிர எல்லா இடங்களிலும் வேகமாகச் செல்வது கூடாது.

மேற்சொல்லப்பட்ட எல்லையைத் தவிர மற்ற இடங்களில் நடந்தே செல்ல வேண்டும்.

சற்றுப் பின்நோக்கி......!

இதுவரை சொல்லப்பட்டவை உம்ராச் செய்யும் ஒருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

பல முறை திருப்பித் திருப்பி இதுவரை சொல்லப் பட்டதை நாம் பார்ப்போமானால் உம்ரா செய்யும் முறை கள் நம் மனதில் ஆழமாகப் பதிந்து கொஞ்சமாவது சரி யாகச் செய்யவேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவர் மன திலும் ஏற்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

துஆ கேட்பதற்கு முன்

எதையும் தெரிந்து செய்வதில் இருக்கும் இன்பமும் நிம்மதியும் தெரியாமல் செய்வதில் இருக்காது.

இதுவரை ஆழமாகப் பார்த்து வந்தவற்றை ஞாபகப் படுத்திக் கொண்டு அடுத்த கட்டத்திற்குள் நாம் செல்வது மிகவும் சிறப்பானது.

இப்போது எந்த இடத்தில் எந்த நிய்யத்தை வைக்க வேண்டும், எங்கு எந்த துஆவை ஓதினால் ஏற்றமானது என்பதை நாம் பார்ப்போம்.

முற்று முழுதாக அரபு தெரியாதவர்களுக்காக எல்லா துஆக்களையும் நிய்யத்துக்களையும் தமிழ் மொழியிலேயே தந்திருக்கிறோம்.

அரபு மொழியை தமிழ் மொழியால் எழுதும்போது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை ஏற்படுவதை எப்படியும் தவிர்க்க முடியாது.

காரணம் அரபு வார்த்தைகளை அப்படியே தமிழ் மொழியில் எழுதும்போது உண்மையான அரபு உச்சரிப் பை உச்சரிக்கவே முடியாது. அதேநேரம் எழுத்தின் மூலம் காட்டவும் முடியாது.

நாங்கள் வினயமாகவும் ஆழமாகவும் வேண்டிக் கொள்வதும் இதுதான். எவ்வளவுதான் தமிழ் படித்திருந் தாலும் தமிழ் மொழியில் தரப்பட்டுள்ள துஆக்களை அரபு மொழியை நன்ருக வாசிக்கத் தெரிந்த ஒருவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு துஆக்களைப் பாடம் செய்வதோ அல் லது பார்த்து ஓதுவதோ நல்லது என நாங்கள் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பல முறை சரியான உச்சரிப்போடு நீங்கள் ஓதிக் கொண்டால் பார்த்து ஓதும்போது எவ்வித தங்கு தடை யும் இன்றி ஓத முடியும்.

அத்தோடு எந்த இடத்தில் எதை ஓத வேண்டும் என்றிருக்கிறதோ அதை நீங்கள் மனப்பாடம் செய்து தான் ஓத வேண்டும் என்பதில்லை. அந்த இடத்தில் இருந்து கொண்டு பார்த்தே தாராளமாக ஓதலாம்.

ஒன்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அரபு மொழியில் ஓதினல் மட்டும்தான் அல்லாஹ் ஏற்றுக் கொள் வான், வேறு எந்த மொழியில் ஓதினலும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பதில்லை.

யாருக்கு எந்த மொழியில் துஆ கேட்க முடியுமோ அந்த மொழியிலே துஆ கேட்கலாம். பார்த்தும் துஆ கேட்கலாம்.

அரபு மொழியில் மாத்திரம்தான் துஆச் செய்ய வேண் டும் என்ற தப்பபிப்பிராயத்தை இன்றுடன் விட்டு விடுங்கள்.

உம்ராவின் நிய்யத்

அல்லாஹும்ம இன்னி உரீதுல் உம்ரத பயஸ் ஸிர்ஹா லீ வதகப் பல்ஹா மின்னீ நவைதுல்

உம்ரத வஅஹ்ரம்து பிஹா லில்லாஹி தஆலா அஸ்ஸவஜல்ல.

எல்லையை அடைந்தவுடன்

(2) "அல்லாஹும்மஜ் அல்லீ பிஹா கராரன் வர்ஸுக்னீ பிஹாரிஸ்கன் ஹலாலன்"

இந்த துஆவை ஓதும்போது தம்முடைய கைகளை உயர்த்தக் கூடாது.

மக்காவில் நுழையும்போது

(3) அல்லாஹும்ம இன்ன ஹாதல் ஹரம் ஹர்முக வல்பலத பலதுக வல்அம்ன அம்னுக, வல்அப்த அப்துத ஜிஉதுக மின்பிலாதின் பயீததின் பிதுனூபின் கதீரதின் வஅஃமாலின் ஸய்யிஅதின் அஸ் அலுக மஸ்அலதல் முளுதர்ரீன இலைக்க அல் முஷ்பிகீன மின் அதா பிக அன்தஸ் தக்பி லனீ பிமஹ்ழி அப்விக வஅன்துத்கிலனீ பஸீஹ ஜன்னத்திக ஜன்னதில் நயீமி அல்லாஹும்ம இன்ன ஹாதா ஹரமுக வஹரமு ரஸூலிக பஹர்ரிம் லஹமீ வதமீ வஅழ்மீ அலன் நாரி அல்லாஹும்ம ஆமின்னீ மின் அதாபிக யௌமு தப்அது இபாதக அஸ்அலுக பிஅன்னக அன் தள்ளாஹு லாயிலாக இல்லா அன்தர் ரஹ்மானுர் ரஹீம் அன்து ஸல்லிய வது ஸல்லிம அலா ஸெய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி தஸ் லீமன் கதீரன் அபதன்.

பாபுஸ் ஸலாம் வாசலில் நுழையும்போது...

(4) அல்லாஹும்ம அன் தஸ்ஸலாமு வமின் கஸ்ஸலாமு பஹய்யினா ரப்பனா பிஸ்ஸலாமி வஅத்ஹில்னல் ஜன்னத தாரஸ்ஸலாமி தபாரக்த வதஆலைத்த யாதல்ஜலாலி வல்இக்ராமி அல்லாஹும்மப் தஹ்லீ அபுவாப ரஹ்மதிக வமஃபிரதிக வஅத்கில்னீ பீஹா பிஸ்மில்லாஹி வல்ஹம்துலில்லாஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாரஸுலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

ஹரம் ஷரீபை அடைந்தவுடன்

(5) ஹல்லல தலாதன் (மூன்று தடவைகள் தக்பீர் கூறவும்) பிறகு லாயிலாஹா இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல்முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷெய்யின் கதீர் அஊது பிரப்பில் பைதி மினல் குப்ரி வல் பக்ரி வமின் அதாபில் கப்ரி வளீகிஸ் ஸத்ரி வஸல்லல்லாஹு அலா ஸைய்யிதினா முஹம்மதினா வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.

(6) ஹஜருல் அஸ்வத் கல்லை அடைந்தவுடன் கல்லைத் தொட்டு முத்தமிட்டபின் கையை உயர்த்தி "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து" என்று ஓத வேண்டும்.

அதன் பிறகு நீங்கள் தவாப் செய்ய ஆரம்பிக்கும்போது இத்த கீழ்க்காணும் துஆவை ஓதவும்.

(7) ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா யிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலீயில் அளீம் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹும்ம ஈமானன் பிக வதஸ்தீகன் பிகிதாபிக வ வபாஅன் பிஅஹதிக வத்திபாஅன் லீ ஸுன்னதி நபிய்யிக வஹபீபிக முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹும்ம இன்னீ அஸ் அலுகல் வ அபுவல் ஆபியத வல் முஆபாதத் தாயிமத பித்தீனி வத்துன்யா வல்ஆகிரதி வல்பௌஸ பில்ஜன்னதி வன்னஜாத பினன் நார்.

ஒரு தவாப் முடிந்தவுடன் கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்ளவும்.

(8) ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதௌவ் வபில் ஆகிரதி ஹஸனதௌவ் வகினா அதாபன் நார் வஅத்ஹில்னல் ஜன்னத மஅல் அப்ராரி யா அஸீஸு யாகப்பாரு யாரப்பல் ஆலமீன்.

இதன் பிறகு இரண்டாம் (தவாப்) வலம் வருவதை ஆரம்பிக்கவும்.

இதன் பிறகு ஏனைய ஆறு சுற்றுக்களிலும் உங்களுக்குத் தெரிந்த மொழியில் தெரிந்த துஆக்களை ஓதிக் கொள்ளவும்.

இப்பொழுது ஏழு சுற்றுக்கள் (தவாப்) முடிந்தவுடன் மகாமு இப்ராஹீம் (அலை) என்ற இடத்தில் இந்த துஆவை ஓதிக் கொள்ளவும்.

(9) அல்லாஹு‍ம்ம இன்னக தஃலமு ஸிர்ரீ வஅலா நிய்யத்தி பகுபல் மஃதிரதீ வதஃலமு ஹாஜதீ பஃதினீ ஸுஃலீ வதஃலமு மாபீ நப்ஸி அஸ் அலுக ஈமானன் யுபாஸிரு கல்பீ வயகீனன் ஸாதிகன் ஹத்தா அஃலம அன்னஹு லாயு ஸீபுனீ இல்லா மாகதப்த லீ ரிளன் மின்க பிமா கஸம்தலீ அன்த வலிய்யி பித்துன்யா வல் ஆகிரத்தி தவப்பனீ முஸ்லிமன் வஅல் ஹிக்னீ பிஸ்ஸாலிஹீன் அல்லாஹு‍ம்ம லாத தஃலனு பீமகாமினு ஹாதா தன்பன் இல்லா கபர் தஹு வலா ஹம்மன் இல்லா பர்ரஜ் தஹு வலாஹா ஜதன் இல்லா களைத்தஹா வயஸ்ஸர்தஹா பயஸ்ஸிர் உமுரனு வஷ்ரஹ் ஸுதூரனு வனவ் விர் குலூபனு வஹ்திம் பிஸ்ஸாலிஹாதி அஃமா லனு அல்லாஹு‍ம்ம தவப்பனு முஸ்லிமீன வஅஹ் யினு முஸ்லிமீன வஅல்ஹிக்னு பிஸ்ஸாலிஹீன கைர கஸாயா வலாமப்தூனீன்.

ஹிஜ்ர் இஸ்மாயீல் (வளவில்) ஓதும் துஆ

(10) அல்லாஹு‍ம்ம அந்த்த ரப்பீ லாயிலாக இல்லா அந்த்த கலக்தனீ வ அன அப்துக அலா அஹ் திக வவஃதிக மஸ்த தஃது அஊது பிக மின் ஸர்ரி மாஸனஃது அல்லாஹு‍ம்ம இன்னீ அஸ் அலுக மின்ஹைரி மாஸஃலக பிஹி இபாது கஸ்ஸாலிஹுன் அல்லாஹு‍ம்ம பிஅஸ் மாயிகம் ஹுஸ்னு வஸிபாதிகல் உல்யா அல்லாஹு‍ம்ம நவ்விர் பில் இல்மி கல்பீ வஸ்தஃமில் பிதா அதிக பதனீ வகல்லிஸ் மினல் பிதனீ ஸிர்ரீ ரப்பனு இன்னனு ஆமன்னு பஃபிர்லனு துனூ பனு வகினு அதாபன் நார்.

இதன்பின் (ஸயீ) தொங்கோட்டம் ஓட ஆரம்பிக்க வேண்டும்.

ஸயீ (தொங்கோட்டம்) செய்ய ஆரம்பிக்கும்போது ஓதும் துஆ

(11) ஸபா மலையில் ஏறி இந்தத் துஆவை ஓதவும்.

அப்தஊ பிமா பத அல்லாஹு வரஸூலுஹு இன்னஸ்ஸபா வல் மர்வத மின்ஸஆ இரில்லாஹி, பமன் ஹஜ்ஜல் பைத அவிஃதமர பலா ஜுனாஹ அலைஹி அய்யத்வ்வப பிஹிமா மன்ததவ்வஅ ஹைரன் பயின்னல்லாஹ ஷாகிருன் அலீம்.

அதன்பின் ஸபா மலையில் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து என்று சொல்லி,

பின்பு அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர் கபீரன் வல்ஹம்து லில்லாஹி கதீரன் வஸுப்ஹானல்லாஹில் அளீமி வபிஹம்திஹில் கரீமி புக்கு ரதம் வஅஸீலா வமினல்லைலி பஸ்ஜுத் லஹு வஸப்பிஹ்ஹு லைலன் தவீலன் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அன்ஜஸ வஹ்தஹு வநஸ்ர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு லாஷெய்அ கப்லஹு வலா பஃதஹு யுஹ்யீ வயுமீத்து வஹுவஹைய்யுன் தாயிமன் லாயமூது வலாயபூது அப தன், பியதிஹில் ஹைரி வஇலைஹில் மஸீரு வஹுவ அலாகுல்லி ஷையின் கதீருன் ரப்பிஃபிர் வர்ஹம் வஃபு வதகர்ரம் வதஜாவஸ் அம்மா தஃலம் இன்னக தஃலமு மாலா நஃலமு இன்னக அன்தல்லாஹுல் அஅஸ் ஸுல் அக்ரம் ரப்பனா நஜ்ஜினா மினன்னாரி ஸாலிமீன கானிமீன பரிஹீன முஸ்தப்ஷிரீன மஅ இபாதிகஸ் ஸாலிஹீன மஅல்லதீன அன் அமள்ளாஹு அலைஹிம்

மினன் நபிய்யீன வஸித் தீக்கீன வஸ்ஸு ஹதாயி, வஸ்ஸாலிஹீன வஹஸுன உலாயிக ரபீகன். தாலிகல் பளுலு மினல்லாகி வகபா பில்லாஹி அலீமன் லாயி லாக இல்லல்லாஹு ஹக்கன் ஹக்கன் லாயிலாக இல்லல்லாஹு தஅப்தன் வரீகன் லாயிலாக இல்லல் லாஹு வலா நஃபுது இல்லா இய்யாஹு முஹ்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் காபிரூன்.

மர்வா மலையை நெருங்கியவுடன் இதை ஓதவும்:

"இன்னஸ்ஸபா வல்மர்வத மின்ஷஆ இரில்லாஹி பமன் ஹஜ்ஜல் பைத அவிஃதமர பலா ஜுனாஹ அலைஹி அய்யத்தவ்வப் பிஹி மாவமன்த தவ்வஅ கைரன் பயின்னல்லாஹ ஷாக்கிருன் அலீம்."

இந்த துஆவை ஒவ்வொரு (ஸயீ) முடிந்ததும் ஓதிக் கொள்ளவும்.

ஏழு ஸயீ (தொங்கோட்டம்) முடிந்ததும் கீழ்க் காணும் துஆவை ஓதிக் கொள்ளவும்:

ரப்பனா தகப்பல்மின்னா வஆபினா வஃபு அன்னா வஅலா தாஅதிக வஸுக்ரிக அஇன்னா வஅலா கைரிக வாதகில்னா வஅலல் ஈமானி வல்இஸ்லாமில் காமிலி ஜமீஅன் தவப்பனா வஅன்த ராளின் அன்னா அல்லாஹும்மர் ஹம்னீ பிதர்கில் மஆஸி அபதன் மாஅபு கைதனீ வர்ஹம்னீ அன் அத கல்லப மாலா யஃநீதி வர்ஸுக்னீ ஹுஸ்னன் நள்ரீ பீமா யுர்ளீக அன்னீ யா அர்ஹமர் ராஹிமீன்.

ஜம்ஜம் தண்ணீரைக் குடிக்கும்போது இந்தத் துஆவை ஓதவும்:

அல்லாஹும்ம—இன்னீ அஸ் அலுக்க இல்மன் நாபிஅன்—வரிஸ்கன் வாஸிஅன் வஷிபாஅன் மின்குல்லி தாயின்.

துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் இடங்கள்

(1) தவாபிலும், தவாபு சுற்றுமிடத்திலும்,

(2) முல்தஜிம்: ஹஜருல் அஸ்வதுக்கும் திரு க.:.பா வின் வாயிலுக்கும் மத்தியில் உள்ள இடம்,

(3) மீஜாபுர் ரஹ்மத்: திரு க.:.பாவின் மேல் பகுதி யில் இருந்து தண்ணீர் விழும் தூம்புவின் கீழே,

(4) திரு க.:.பாவின் உள்ளே,

(5) ஜம்ஜம் கிணற்றருகே, நீர் அருந்திய பின்பும்,

(6) மஹாமே இப்ராஹீமுக்கு அருகே,

(7) ஸபாவிலும், மர்வாவிலும்,

(8) ஸயீ செய்யுமிடங்களில் ஸபா, மர்வாவிற்கு மத்தியில் உள்ள பகுதி.

(9) அரபாவில்,

(10) முஜ்தலிபாவில்,

(11) மினுவில், ஷைத்தானுக்கு கல்லெறிந்த பிறகு, (ஜம்ரதுல் அக்பா—பெரிய ஷைத்தான் நீங்கலாக)

(12) திரு க::பாவை கண்ணுல் காணும்போது,

(13) ஹத்தீமின் உள்ளே,

(14) ஹஜ்ருல் அஸ்வதுக்கும்—ருக்னுல் யமானிக்கும் இடையே.

பின்வரும் நீண்ட துஆக்களை தமிழ் மொழியிலேயே அல்லாஹ்விடம் கேட்கலாம்.

அல்ஹம்துலில்லாஹ்!

அல்லாஹு‍ம்ம ஸல்லி அலா ஸய்யிதினு வ் மௌலானு முஹம்மதின் வபாரிக வஸல்லிம் அலைஹி! லாயிலாக இல்லாஹு‍வல் ஹலீமுல் கரீம் ஸு‍ப்ஹானல்லாஹி ரப்பில் அர்ஷில் அளீம் வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

நஸ்அலுக்க முஃஜிபாதி ரஹ்மதிக்க வஅஸாயிம மஃபிரதிக வல்கனீமத மின்குல்லி பிர்ரிவ் வஸ்ஸ லாமத மின்குல்லி இத்மின் லாத தஃலனு தன்பன் இல்லா கபர்த்தஹு‍ யா அர்ஹமர்ராஹிமீன் வலாஹம்மன் இல்லா பர்ரஜ்தஹு‍ வலா ஹாஜ தன் ஹியலகரிளன் இல்லா கழைதஹா யா அர் ஹமர் ராஹிமீன், யா அர்ஹமர் ராஹிமீன், யா அர்ஹமர் ராஹிமீன்.

துஆ

யா அல்லாஹ்! என்னுடைய தீனிலும், துன்யாவி லும், என்னுடைய குடும்பத்திலும், பொருளிலும், மன்னிப்பையும், ஆரோக்கியத்தையும் தந்தருள உன்னை வேண்டுகிறேன். யா அல்லாஹ்! என்னுடைய (அவ்ரத்துக்களை) வெட்கஸ்தலங்களை மறைத்தருள் வாயாக! யா அல்லாஹ்! என்னுடைய பயங்களை விட்டும் என்னை நிற்பயமானவனுக்குவாயாக! யா அல்லாஹ்! என்னுடைய முன் பக்கமும், என்னுடைய பின்பக்கமும், என் வலப்புறமும், என் இடப்புறமும்,

என் மேல் பாகமும் எல்லா திசையிலிருந்தும் என்னை நீ காப்பாற்றுவாயாக! என் கீழ் பாகத்திலிருந்து நான் தாக்கப்படுவதை விட்டும் உன் வலுப்பத்தைக் கொண்டு காவல் தேடுகிறேன்.

★ யா அல்லாஹ்! என்னுடைய உடலிலும், என்னுடைய கேள்வியிலும், என்னுடைய பார்வையிலும் ஆரோக்கியத்தைத் தந்தருள்வாயாக. உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் யாருமில்லை. யா அல்லாஹ்! குப்ர், ஏழ்மை, கப்ருடைய வேதனை முதலியவைகளிலிருந்தும் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். உன்னைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் யாருமில்லை.

★ யா அல்லாஹ்! நீயே என்னைப் படைத்துப் பரிபாலிப்பவன், உன்னைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் யாருமில்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமையாக இருக்கிறேன். என்னால் இயன்ற அளவு உன்னோடு எடுத்துக் கொண்ட வாக்குறுதியையும், ஒப்பந்தத்தையும் நிறைவேற்றக் கூடியவனாக இருக்கிறேன். நான் செய்த தீங்கிலிருந்து உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். நீ எனக்குச் சௌபாக்கியங்களையும் அருளினாய் என நான் ஒப்புக் கொள்கிறேன். எனவே என்னுடைய பாவத்தை மன்னிப்பாயாக! பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர யாருமில்லை. யா அல்லாஹ்! இயலாமை, சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம் முதலியவற்றிலிருந்தும் உன்னைக் கொண்டு காவல்

தேடுகிறேன். கடன் அதிகரிப்பதையும், மனிதர்களின் ஆதிக்கத்தையும் விட்டு உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன்.

★ யா அல்லாஹ்! இன்றைய தினத்தின் ஆரம்பத்தை நலவானதாகவும், அதன் நடுப் பகுதியை வெற்றி யானதாகவும், அதன் இறுதியை ஜெயமானதாகவும் ஆக்கியருள்வாயாக! இரக்கமுடைய நாயனே! இரு லோக நல்லவைகளையும் தந்தருள்வாயாக! மரணத் துக்குப் பின் நல்வாழ்வையும், சங்கைக்குரிய உன் திருமுகத்தைப் பார்த்து மகிழும் பாக்கியத்தையும், எவ்வித சங்கடங்கள் குழப்பங்களின்றி உன்னைச் சந் திக்கும் பெரும் பேற்றினையும் தந்தருள உன்னை வேண்டுகிறேன். யா அல்லாஹ்! நான் பிறருக்கு அநீதி இழைப்பதில் இருந்தும் அல்லது நான் அநீதி இழைக்கப்படுவதில் இருந்தும் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். பிறரை நான் தாக்குவதிலிருந் தும், பிறர் என்னைத் தாக்குவதிலிருந்தும் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். தவறைச் சம்பாதிப் பதில் இருந்தும், மன்னிக்கப்படாத பாவத்திலிருந் தும் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன்.

★ யா அல்லாஹ்! உன்னை அதிகம் ஞாபகம் செய் யக் கூடியவனாகவும், உனக்கு அதிகம் வழிபடக் கூடியவனாகவும், உன்னை அதிகம் அஞ்சக் கூடியவ னாகவும், உன் பக்கமே அதிகம் மீள்பவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக! யா அல்லாஹ்! என் தௌபாவை ஏற்றுக் கொள்வாயாக! என் பாவத்

த்தைச் சுத்தப்படுத்துவாயாக! என்னுடைய துஆவிற்குப் பதிலளிப்பாயாக! என்னுடைய ஆகாரத்தை உறுதி யாக்குவாயாக! என் உள்ளத்தை நேர்வழிப் பெறச் செய்வாயாக! என்னுடைய நாவை உறுதியாக்கு வாயாக! பொறாமை நெஞ்சில் குடி கொள்வதை விட்டும் என்னை அப்பால் படுத்துவாயாக!

★ யா அல்லாஹ்! என்னுடைய காரியத்தில் நான் நிலைப் பட்டிருப்பதையும், நேரிய வழியில் மன உறுதியுடன் இருப்பதையும் உன்னிடம் கேட்கின்றேன். நீ எனக் கருளிய சௌபாக்கியங்களுக்கு நன்றி செலுத்தி, உன்னை நல்ல முறையில் வணங்கக் கூடியவனாகவும் என்னை ஆக்கியருள உன்னை வேண்டுகிறேன்! யா அல்லாஹ்! குறையற்ற உள்ளத்தையும், உண்மை யான நாவையும் தந்தருள உன்னிடம் வேண்டுகிறேன். நீ நல்லதென அறிந்த எல்லாவற்றையும் உன்னிடம் வேண்டுகிறேன். நீ தீங்கென அறிந்த எல்லாவற்றி லும் பாதுகாவல் தேடுகிறேன். நீ அறிந்த எல்லா வற்றிலிருந்தும் உன்னிடம் பிழை பொறுக்கத் தேடு கிறேன். மறைவானவை அனைத்தையும் நீ நன்கறிந் தவனாய் இருக்கின்றாய்.

★ யா அல்லாஹ்! சீரிய பாதையில் செல்ல எனக்கு மன உதிப்பைத் தந்தருள்வாயாக! என் நஃப்ஸின் தீங்கை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக! யா அல்லாஹ்! நன்மையானவற்றைச் செய்வதையும், தீயவற்றை விடுவதையும், ஏழைகளை நேசிப்பதையும்

உன்னிடத்தில் கேட்கின்றேன். என்னை நீ மன்னித் தருள்வதை உன்னிடம் கேட்கின்றேன். நீ உன்னு டைய அடியார்களை சோதிக்க நாடினால், அச்சோத னைக்குள் நான் சிக்காமல் என்னை மரணிக்கச் செய்வா யாக. யா அல்லாஹ்! உன்னுடைய நேசத்தையும், உன்னை யார் நேசிக்கின்றாரோ அவர் நேசத்தையும், உன் நேசத்தின்பால் சேர்த்து வைக்கும் எல்லா அமல் களை நேசிப்பதையும் நான் உன்னிடம் கேட்கின்றேன்.

யா அல்லாஹ்! நல்ல கேள்வியையும், நல்ல துஆவை யும், நல்ல வெற்றியையும், நற்கூலியையும் நீ எனக் குத் தந்தருள உன்னிடம் வேண்டுகிறேன். என்னை நிலையானவனாக ஆக்கி என் நன்மையின் எடையை அதிகரிப்பாயாக! என் ஈமானை பூரணமாக்குவாயாக! சுவர்க்கத்தில் என் அந்தஸ்தை உயர்த்துவாயாக! என் தொழுகைகளை ஏற்றுக் கொள்வாயாக! என்னு னுடைய தவறுகளை மன்னித்தருள்வாயாக! சுவர்க்கத் தில் உயர் அந்தஸ்தைத் தந்தருள்வாயாக!

யா அல்லாஹ்! நல்ல காரியங்களின் திறவு கோலை யும், அதன் ஆரம்பத்தையும், அதன் நல்ல முடிவை யும், அக புற நன்மையானவற்றையும் உன்னிடம் கேட்கின்றேன். சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்துக் களைத் தந்தருள்வாயாக!

யா அல்லாஹ்! என் சிறப்பை உயர்த்துவாயாக! என் பாவத்தை விட்டு விடுவாயாக!என் உள்ளத்தைத் தூய்

மைப்படுத்துவாயாக! என் மர்மஸ்தலங்களைப் பாது காப்பாயாக! என் பாவங்களை மன்னித்தருள்வாயாக! யா அல்லாஹ்! சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்தைத் தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! என்னுடைய கேள்வி, பார்வை, என்னுடைய ஆத்மா, என்னுடைய தோற்றம், குணம் எல்லாவற்றிலும் பரக்கத் செய்வா யாக. யா அல்லாஹ்! என்னுடைய குடும்பத்திலும், என்னுடைய வாழ்க்கையிலும்,என்னுடைய அறிவிலும் பரக்கத் செய்வாயாக! யா அல்லாஹ்! என்னுடைய நல்ல காரியங்களை ஏற்றுச் சுவர்க்கத்தில் உயர் அந் தஸ்தைத் தந்தருள்வாயாக!

★ யா அல்லாஹ்! பலாய் முஸீபத்துக்களை விட்டும், எங்களுக்கு ஏற்படும் கஷ்டத்தின் மீது எதிரிகள் சந் தோஷப்படுவதை விட்டும் உன்னிடம் காவல் தேடு கிறேன். உள்ளங்களைப் பாராட்டக் கூடியவனே! என் உள்ளத்தை உன் மார்க்கத்தில் நிலைக்கச் செய் வாயாக! உள்ளங்களையும் பார்வைகளையும் திருப்பக் கூடியவனே! எங்கள் உள்ளங்களை உன்னை வழிபடுவ தன்பால் திருப்புவாயாக! யா அல்லாஹ்! நன்மையைக் குறைக்காமல் அதிகம் தந்தருள்வாயாக. எங்களை இழிவுபடுத்தாமல் சங்கைப்படுத்துவாயாக! எங்களுக்கு இல்லை என்று சொல்லாது கொடுப்பாயாக. குறைவின் றிக் கொடுப்பாயாக!

★ யா அல்லாஹ்! எங்கள் எல்லாக் காரியங்களின் முடி வையும் நல்ல முடிவாக்குவாயாக! உலகில் ஏற்படும்

இழிவை விட்டும், மறுவுலக வேதனையை விட்டும் எங்களைக் காப்பாற்றுவாயாக! எங்களுக்கும் எங்கள் பாவத்துக்குமிடையில் சுற்றி வரும் உள்ளச்சத்தை எங்களுக்குத் தந்தருள்வாயாக! உன்னுடைய சுவர்க்கத்தின்பால் கொண்டு செல்கின்ற உன் வழிபாட்டை எங்களுக்குத் தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! எங்கள் கேள்விகளிலும், எங்கள் பார்வைகளிலும், எங்கள் சக்திகளிலும் சுகத்தைத் தந்தருள்வாயாக! எங்களுக்கு அநீதி இழைத்தவனிடம் நீ பழிக்குப் பழி வாங்குவாயாக! எங்களைப் பகைப்பவனுக்கு எதிராக எங்களுக்கு உதவி புரிவாயாக! உலகத்தை எங்கள் முக்கிய நோக்கமாகவும் அதற்காகவே வாழக் கூடியவர்களாகவும் எங்களை ஆக்கி விடாதே. எங்கள் சோதனைகளை எங்கள் மார்க்கத்தில் ஆக்கி விடாதே. நாங்கள் செய்த பாவத்தின் காரணத்தால் உன்னை அஞ்சாதவனையும் எங்களுக்குக் கருணை புரியாதவனையும் எங்கள் மீது சாட்டி விடாதே.

யா அல்லாஹ்! உன்னுடைய ரஹ்மத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையானவற்றை எல்லாம் உன்னிடம் கேட்கின்றேன். உன்னுடைய மன்னிப்புக் கிடைப்பதற்குள்ள மன உறுதியை உன்னிடம் கேட்கின்றேன். எல்லா நல்லவற்றையும் கனீமத்தாகத் தந்து, எல்லாத் தீங்குகளை விட்டும் காப்பாற்றுவாயாக. சுவர்க்கம் கிடைத்து வெற்றி பெற்றவனாகவும் என்னை ஆக்குவாயாக!

★ யா அல்லாஹ்! கிருபையாளருக்கெல்லாம் மிகக் கிருபையாளனான நாயனே! நீ மன்னிக்காமல் எங்கள் எந்தப் பாவத்தையும் விட்டு விடாதே. எங்களுடைய எந்தக் குறையையும் மறைக்காமல் வைத்து விடாதே. சந்தோஷப்படுத்தாமல் எங்கள் எந்தக் கவலையையும் விட்டு விடாதே! நிறைவேற்றாமல் எங்கள் எந்தக் கடனையும் வைத்து விடாதே! உனக்கு விருப்பமும் எங்களுக்குப் பயனுமுள்ள இரு லோக எந்தத் தேவைகளையும் நிறைவேற்றாமல் விட்டு விடாதே.

★ யா அல்லாஹ்! என் கல்பிற்கு நீ நேர்வழி காட்டும்படியான ரஹ்மத்தை உன்னிடமிருந்து கேட்கின்றேன். சிதறுண்டு கிடக்கின்ற என் காரியங்களை நீ ஒன்று சேர்க்கும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். என்னிடமிருந்து மறைந்து போனவற்றை நீ பாதுகாக்கும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். என்முன் உள்ளவற்றை நீ உன்னிடத்தில் உயர்த்திக் கொள்ளும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். நீ எந்த ரஹ்மத்தால் முகத்தை வெண்மையாக்குவாயோ அந்த ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். என்னுடைய அறிவை நீ தூய்மையாக்கும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். நீ எனக்கு நேர்வழி காட்டி என்னை விட்டும் பித்னாக்களை தடுக்கும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன். எல்லா கெட்ட காரியங்களையும் விட்டும் நீ என்னைப் பாதுகாக்கும்படியான ரஹ்மத்தை உன்னிடம் கேட்கின்றேன்.

★ யா அல்லாஹ்! தீர்ப்பு நாளில் வெற்றியையும், சீதேவிகள் வாழ்வையும், ஷுஹதாக்கள் இருப்பிடத்தையும் உன்னிடத்தில் கேட்கின்றேன். நபிமார்களின் தோழமையையும், எதிரிகளுக்குக் கேடாக எனக்கு வெற்றியையும் உன்னிடத்தில் கேட்கின்றேன். யா அல்லாஹ்! சரியான ஈமானையும், நற்குணத்தில் நம்பிக்கையையும், வெற்றி மேல் வெற்றியையும் தந்தருள்வாயாக. உன்னிடமிருந்துள்ள ரஹ்மத்தையும் ஆபியத்தையும் பாவ மன்னிப்பையும் உன் விருப்பத்தையும் உன்னிடம் கேட்கின்றேன். யா அல்லாஹ்! ஆரோக்கியத்தையும், பத்தினித் தன்மையையும், நற்குணத்தையும், உன் தீர்ப்பைப் பொருந்திக் கொள்ளும் உள்ளத்தையும் உன்னிடம் கேட்கின்றேன்.

★ யா அல்லாஹ்! என் நப்ஸின் தீங்கிலிருந்தும், உன் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற எல்லா உயிர்ப் பிராணிகளின் தீங்கிலிருந்தும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். நிச்சயமாக என் நாயன் நேரான பாதையைக் காண்பிப்பவனாக இருக்கின்றான்.

★ யா அல்லாஹ்! நீ என்னுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். நான் இருக்கும் இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாய். என் இரகசியத்தையும், பரகசியத்தையும் அறிந்தவனாய் இருக்கின்றாய். என் காரியங்களில் எதுவும் உனக்குத் தெரியாமல் இருப்பதில்லை. நான் ஓர் ஏழையாகவும் தேவையுடையவனாகவும் இருக்கின்றேன். தஞ்சம் நாடி

அபயம் கோரக் கூடியவனாக இருக்கின்றேன். மிக அஞ்சி பயந்து நான் செய்த பாவங்களை ஒப்புக் கொண்டவனாக மிஸ்கீன்கள் கேட்பது போல உன்னிடம் கேட்கின்றேன். பார்வை இழந்தவன் பயந்து உன்னை அழைத்துக் கேட்பது போல் கேட்கின்றேன். கேவலமான பாவி உன்னிடம் இறைஞ்சுவது போல் உன்னை இறைஞ்சிக் கேட்கின்றேன். தன் சிரசை உனக்காகத் தாழ்த்தி வைத்து, தன்னையே உனக்காக அர்ப்பணித்தவன் கேட்பது போல் உன்னிடம் கேட்கின்றேன். என் துஆவை ஏற்று அங்கீகரித்தருள்வாயாக!

யா அல்லாஹ்! எங்களை மௌத்தாக்க நாடிய நேரத்தில் பீஸபீல்காரர்களின் மௌத்தைப் போன்று இன்பமான மௌத்தெனும் குடிப்பைப் புகட்டியருள்வாயாக! யா அல்லாஹ்! நாங்கள் ஒருப்பாய்ந்து கிடக்கும் இக்கட்டான இருட்டறை என்னும் கப்ரை விசாலமாக்கி, ஒளிவாக்கித் தந்தருள்வாயாக. யா அல்லாஹ்! கப்ரில் வேதனை செய்யக் கூடிய பாம்பு, நெருப்புடைய வேதனைகளை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக. யா அல்லாஹ்! கப்ர்களில் இருந்து எங்களை எழுப்பி எங்களை மஹ்ஷர் வெளிக்கு அழைக்கப்படும் நேரத்தில் எங்களுடைய முகங்களை எல்லாம் ஒளிவினால் தெளிவாக்கி எங்களுடைய கடிதங்களை வலது கையில் தந்தருள்வாயாக. யா அல்லாஹ்! எங்களுடைய கொஞ்ச அமலுடைய நிறையை உன்னுடைய வரிசை ரஹ்மத்தைக் கொண்டு கனமாக்கி

வைப்பாயாக. யா அல்லாஹ்! ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தில் மின் வெட்டி மறையுமாப் போல் கடத்தி அருள்வாயாக. யா அல்லாஹ்! சுகண்டியைக் கொண்டு ஈடேற்றம் பெற்றவர்களாய் 'தின்னுங்கோ, குடியுங்கோ' என்ற சொல்லையும், ஈடேற்றம் தரும் நாயனிடத்தில் இருந்து வரும் ஸலாம், ஸலாம் என்ற சொல்லையும், ஸலாமத்துடைய மாளிகையில் நீடூழி வாழ்க என்ற சொல்லையும் தவிர யாதொன்றும் கேட்ப தில்லையே, அவ்விதமான சுவர்க்கலோகத்தில் எங்கள் அனைவர்களையும் குடியிருப்பாட்டி வைப்பாயாக.

ரப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகி ரதி ஹஸனதன் வகினா அதாபன் நார்.

ஸல்லல்லாஹு தஆலா வஸல்லிம் அலா கைரி கல்கிஹி ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன் ஸுப்ஹான ரப்பிக ரப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன் வஸலாமுன் அலல் முர்ஸலீன வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

